# கைத்தொழில்

## பொதுவான செயலாற்றம்

1988 இல் உண்மை நியதிகளில் கைத்தொழில் வெளியீடுகளின் பெறுமதி முன்னைய ஆண்டின் 8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தனியார்துறைக் கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி 11 சதவீதத்தினால் உயர்வுற்ற வேளையில் அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. குறிப்பிட்ட பிரதேசங்களில் மின் வழங்கல்கள் தடங்கலுற்றமை, வேலையிடங்களில் வரவு மிகக் குறைவாக இருந்தமை பகிர்ந்தளிப்புப் பாதைகளில் ஏற்பட்ட குறுக்கீடுகள் என்பன 1988 இன் கைத்தொழில் வெளியீட்டின் குறைந்த வளர்ச்சிக்குப் பொறுப்பாக இருந்த முதன்மைக் காரணிகளாகும்.

அரசதுறைக் கைத்தொழில்களின் மிகக் குறைந்த செயலாற்றம் தேசிய புடவை, இலங்கை எண்ணெய் கொழுப்பு, அரச மரம், தேசிய தாள், அரச வடிசாலைக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனம் போன்ற பல முக்கிய அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் குறைவடைந்த வெளியீட்டு மட்டங்களில் பிரதிபலித்தது. தனியார் துறையில் வெளியீட்டு வளர்ச்சி முக்கியமாகப் புடவைகள், அணியும் ஆடை மற்றும் தோல், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், உணவு மற்றும் குடிபான வகைகளிலிருந்து கிடைத்தது.

தீர்வைக் கொள்கை, உள்ளூர்க் கைத்தொழில்களுக்குத் தாக்கம் மிக்க பாதுகாப்பினை உயர்ந்த மட்டத்தில் வழங்கியமை, ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்களை ஊக்குவித்தல், கூட்டப்பட்ட உள்நாட்டுப் பெறுமதியை உயர்வாகக் கொண்டுள்ள கைத்தொழில்களை மேம்படுத்தியமை என்பனவற்றை மேற்கொண்டதன் மூலம் கைத்தொழில் வளர்ச்சியின் உத்வேகத்தையும் பேணுவதில் தொடர்ந்தும் முக்கிய பங்கினை வகித்தது. புடவைகள் தோல் உற்பத்திகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் போன்ற கைத்தொழில்களை மேலும் விரிவாக்கும் பொருட்டுக் குறிப்பிட்ட பொறித்தொகுதிகளின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. நடுத்தர பெரிய அளவிலான கைத்தொழில் முயற்சிகளுக்கு உதவுவதற்காக உலக வங்கிகளிலிருந்தும் ஆசிய வங்கியிலிருந்தும் தொடர்கொடுகடன்களைப் பெறுவது தொடர்பான பேச்சுவார்த்தைகளும் இடம் பெற்றன. இது பங்கு மூலதனத்திற்கான ஏற்பாடு ஏற்றுமதி நிருவாகத்தைத் தரமுயர்த்துவதற்கான தொழில்நுட்ப உதவி மூலதனச் சந்தைகளை மேம்படுத்தல், அபிவிருத்திநிதியிடல் நிறுவனங்களின் தகைமையை முன்னேற்றுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. 1988 ஏப்பிறலில் மூன்றாவது சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் கடன் திட்டம்—IIIதொழிற்பாட்டிற்கு வந்தது.

## முதலீடு

1988 இல் உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட புதிய கைத்தொழில்கள் கணிசமான முன்னேற்றத்தினைப் பதிவு செய்தன. உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழு முன்னைய ஆண்டின் 364 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 608 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச்செயற்றிட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீடு ரூ. 11,420 இலட்ச

மாக விளங்கி தொழில்நிலை உள்ளார்ந்த வளமாக 18,633 பேரையும் கொண்டிருந்தது.

1988 இல் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழு முன்னைய ஆண்டின் 41 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 45 கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச் செயற்றிட்டங்கள் எதிர்பார்த்த மொத்த முதலீடான ரூ. 9,540 இலட்சத்தில் ரூ. 2,250 இலட்சம் வெளிநாட்டுக் கூறுகளாகும். இவற்றில் 21 செயற்றிட்டங்கள் அடிப்படை உலோக, இரசாயன உற்பத்தி வகைகளில் காணப்பட்டன. மொத்தத் தொழில் நிலை உள்ளார்ந்த வளம் 3,542 ஆட்கள் என மதிப்பிடப்பட்டது.

1988 இல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு முன்னைய ஆண்டின் அதே எண்ணிக்கையைக் கொண்ட 31 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச் செயற்றிட்டங்களின் முதலீட்டு உள்ளார்ந்த வளம் ரூ. 11,200 இலட்சம் கொண்ட வெளிநாட்டுக் கூறுகளை உள்ளடக்கிய ரூ. 17,270 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்தத் தொழில்நிலை உருவாக்கம் 12,164 ஆட்கள் என மதிப்பிடப்பட்டது. 1988 இறுதியில் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு 283 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன் இதில் 164 கைத்தொழில்களை அமைத்துக் கொள்வதற்காக கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

உற்பத்தி

1988 இல் உண்மை நியதிகளில் கைத்தொழில் வெளியீடுகளின் பெறுமதி 1987 ஆம் ஆண்டின் 8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பெற்றோலிய வெளியீட்டின் பெறுமதியை நீக்குமிடத்து கைத்தொழில் உற்பத்திகள் 5 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1988 இல் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கைத்தொழில் துணைத் துறைகளாக அடிப்படை உலோக உற்பத்திகள் (21 சதவீதம்), புடவைகளும் அணியும் ஆடைகளும் மற்றும் தோல் உற்பத்திகள் (12 சதவீதம்), உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (9 சதவீதம்), இரசாயனங்கள், பெற்றோலியம், பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (5 சதவீதம்) என்பன விளங்கின. மர, மர உற்பத்திகள் துறையினது வெளியீடு 17 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றமைக்கு, இவ்வாண்டில் மரம் தறிக்கும் தொழிற்பாடுகள் குறைவடைந்தமையினைத் தொடர்ந்து அரச மரக் கூட்டுத் தாபனத்தினதும் இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தினதும் உற்பத்தி குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும்.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் அணியும் ஆடைக் கைத்தொழில் தொடர்ச்சியாக விரிவடைந்தமையே புடவை அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி வகைகளில் உயர்ந்த மட்ட வெளியீட்டிற்கு முக்கிய பொறுப்பாக இருந்தது. எனினும் அரசதுறையில் இவ்வகையில் வெளியீடு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உணவு, குடிபானம் மற்றும் புகையிலை வகையில் அரசதுறை வெளியீட்டில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி இறைச்சி உற்பத்திகள், மா, இனிப்பு மற்றும் விசுக்கோத்து போன்ற தனியார்துறையின் பல உற்பத்திகளின் வெளியீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் ஈடுசெய்யப்பட்டது. தாள், தாள் உற்பத்திகளின் வெளியீட்டில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சிக்குத் தேசிய தாள் கூட்டுத்தாபனத்தின் தாழ்ந்த மட்ட உற்பத்தியே பெருமளவுக்குக் காரணமாகும். பெற்றோலியத்தைத் தூய்மைப்படுத்தல் மற்றும் இரசாயன உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள், பிளாத்திக்கு உற்பத்திகள், மருந்தாக்கல் உற்பத்திகள் போன்ற பல தனியார்துறைக் கைத்தொழில்களின் அதிகரித்த உற்பத்திகள் இரசாயனம், பெற்றோலியம் மற்றும் பிளாத்திக்கு வகையின் வெளியீட்டில் விரிவினை ஏற்படுத்தின. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்குத் தனியார்துறைக் கைத்தொழில் தயாரிப்புக்கான கல்நார்த் தகடுகள், கண்ணாடி உற்பத்திகள் மற்றும் மட்பாண்டம் என்பனவற்றின் அதிகரித்த வெளியீடுகளே பெருமளவிற்குக் காரணமாக இருந்தன. அடிப்படை உலோக உற்பத்தி வகையில் ஏற்பட்ட அதிகரித்த வெளியீடு சிறப்பாக உருக்குக் கூட்டுத்தாபனத்தின் உயர்ந்த மட்ட வெளியீட்டிலிருந்து கிடைத்தது. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்தித் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்குப் பொறிகளும் கருவிகளும், நீர் இறைக்கும் பம்புகள் மற்றும் மின்குமிழ்கள் போன்ற உற்பத்திகளின் தயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்த தனியார்துறைக் கைத்தொழில்களின் அதிகரித்த வெளியீடுகளே பெருமளவிற்குக் காரணமாகும்.

1988 இல் நடைமுறை நியதிகளில் கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 11 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அடிப்படை உலோக உற்பத்திகளின் பெறுமதி 59 சதவீதத்தினாலும், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் பெறுமதி 23 சதவீதத்தினாலும், புடவை அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகளின் பெறுமதி 18 சதவீதத்தினாலும், உணவு குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் பெறுமதி 13 சதவீதத்தினாலும், தாள் உற்பத்திகளின் பெறுமதி 9 சதவீதத்தினாலும், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகளின் பெறுமதி 5 சதவீதத்தினாலும், இரசாயன உற்பத்திகள் 2 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன.

அட்டவணை 1.15

## கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1984 — 1988
(நடைமுறை விலைகள்)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிவகை, புகையிலை ... | 8,623 | 10,497 | 12,129 | 12,962 | 14,675 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 7,565 | 9,505 | 12,088 | 15,428 | 18,166 |
| 3. மர, மர உற்பத்திகள் | 640 | 705 | 632 | 677 | 640 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 907 | 1,187 | 1,289 | 1,372 | 1,492 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 14,328 | 13,104 | 11,088 | 13,477 | 13,681 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்தது) ... | 1,829 | 1,854 | 2,053 | 2,156 | 2,267 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 199 | 123 | 281 | 307 | 487 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும் போக்குவரத்துக் கருவிகளும் ... | 1,456 | 1,592 | 1,757 | 2,006 | 2,477 |
| 9. வேறெங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் ... | 106 | 125 | 136 | 155 | 178 |
| மொத்தம் ... | 35,653 | 38,692 | 41,453 | 48,540 | 54,063 |

அ. தற்காலிகமானவை.


மூலம்: இலங்கை மத்திய வங்கி.

### அரசதுறைக் கைத்தொழில்

உண்மை நியதிகளில் 1988 இல் அரசதுறைக் கைத்தொழில் வெளியீடு 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் அத்தகைய வீழ்ச்சி இரண்டாவது தொடர்ச்சியான ஆண்டாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது பல முக்கிய அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளான தேசிய புடவை, இலங்கை எண்ணெய்க் கொழுப்பு, தேசிய தாள், அரச மரம், அரச வடிசாலை ஆகிய கூட்டுத்தாபனங்களினதும் அரசுடைமையாக்கப்பட்ட பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனத்தினதும் உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளின் விளைவாகும். அத்தகைய வீழ்ச்சிகள் இவ்வாண்டில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம், இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் என்டனவற்றில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தி நன்மைகளை மிகக் கூடுதலாக எதிரீடு செய்தது.

வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவு செய்த அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகள் இலங்கை கனிப்பொருள் மணல் (46 சதவீதம்), அரச மரம் (43 சதவீதம்), இலங்கை எண்ணெய் கொழுப்பு (36 சதவீதம்), அரச வன்கலம் (25 சதவீதம்), அரச வடிசாலை (23 சதவீதம்), தேசிய தாள் (8 சதவீதம்), இலங்கை ரயர் (6 சதவீதம்), தேசிய புடவை (5 சதவீதம்), பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனம் (60 சதவீதம்), வரையறுக்கப்பட்ட அரச இறப்பர் தயாரிப்புக் கூட்டு நிலையம் (15 சதவீதம்) என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

அரச துறையின் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.16

## அரசதுறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண் (1977=100)

| வகை | | 1986 | 1987 | 1988(அ) |
|---|---|---|---|---|
| 1. உணவு, குடிவகை, புகையிலை | ... | 46.6 | 40.7 | 31.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | ... | 208.0 | 200.0 | 189.7 |
| 2.1 புடவைகள் | ... | 278.9 | 271.3 | 257.6 |
| 3. மர, மர உற்பத்திகள் | ... | 103.4 | 103.8 | 71.4 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | ... | 160.6 | 167.9 | 153.7 |
| 5. இரசாயன உற்பத்திகள் | ... | 114.9 | 115.3 | 119.3 |
| 5.1 பெற்றோலிய உற்பத்திகள் | ... | 115.3 | 115.9 | 120.7 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | ... | 132.7 | 147.3 | 142.4 |
| 6.1 சீமெந்து | .. | 154.4 | 177.3 | 175.1 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | ... | 64.1 | 71.1 | 86.1 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | ... | 141.9 | 102.5 | 65.6 |
| எல்லா வகைகளும் | ... | 116.2 | 115.7 | 114.0 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த | | 117.2 | 115.4 | 106.4 |

(அ) தற்காலிகமானவை. மூலம் : இலங்கை மத்திய வங்கி.

மின்வலு நிரம்பலில் ஏற்பட்ட தடை, ஆண்டின் இறுதிப் பகுதியில் வேலைக்கு வருகை தராமையும் பங்கீட்டில் ஏற்பட்ட தடைகளும் என்பன அரசதுறைக் கைத்தொழில் உற்பத்தியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தின. இலங்கைக் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு முக்கியமாக யான் ஓயாவி லிருந்து புல்மோட்டைத் தொழிற்சாலைக்கான நன்னீர் வழங்கல் முறையில் ஏற் பட்ட இடையூறு காரணமாக, வீழ்ச்சியடைந்தது. எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம் நிதி இழப்புக்கள் காரணமாக அதன் உற்பத்தியைக் குறைத்துக் கொண்டது. தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தினதும் வரையறுக்கப்பட்ட அரச இறப்பர் தயாரிப்புக் கூட்டு நிலையத்தினதும் வெளியீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக இவ்வாண்டில் நிலவிய பாதகமான காலநிலை நிலைமைகள் காரணமாக ஏற்பட்டதாகும். சூளைக்கல் நிரம்பல் போதாதிருந்தமை இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியில் பாதகமான விளைவினை ஏற்படுத்தியது. இலங்கை ஒட்டுப்பலகை, அரச மரக் கூட்டுத்தாபனங்களின் வெளியீடுகள் மரம் தறித்தல் தொழிற்பாடுகள் குறைவடைந்தமை காரணமாக ஏற்பட்ட மர நிரம்பல் பற்றாக்குறையின் விளைவாக வீழ்ச்சியுற்றன.

இவ்வாண்டில் அதிகரித்த வெளியீட்டினைப் பதிவு செய்த கைத்தொழில் கூட்டுத்தாபனங்களாக இலங்கைச் சீனி (47 சதவீதம்), இலங்கை உருக்கு (21 சதவீதம்), இலங்கைப் பெற்றோலியம் (4 சதவீதம்) என்பன விளங்கின.

அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டின் மொத்தப் பெறுமதியில் ஏறக் குறைய அரைப்பங்கிற்கு வகை கூறும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளி யீட்டில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு ஆண்டு முழுவதும் தூய்மி இடையீடின்றித் தொழிற்பட்டமை முக்கிய காரணமாகும். அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு

## அட்டவணை 1.17

## கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதி மாற்றல்கள் 1986—1988

ரூபா பத்து இலட்சம்

| கூட்டுத்தாபனங்கள்/முயற்சிகள் | மூலதனம் | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1986 | 1987 | 1988 (அ) | 1986 | 1987 | 1988(அ) | 1986 | 1987 | 1988(அ) |
| 1. தேசிய தாள் கூட்டுத்தாபனம் ... | — | — | — | 7.7 | 8.0 | 7.8 | 7.7 | 8.0 | 7.8 |
| 2. இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் ... | 131.0 | 195.0 | 155.5 | 127.1 | 42.0 | 50.0 | 258.1 | 237.0 | 205.5 |
| 3. இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் ... | — | — | — | 4.8 | — | 96.9 | 4.8 | — | 96.9 |
| 4. தேசிய பாற்சபை ... | 3.2 | 2.5 | 2.5 | 95.9 | — | 29.0 | 99.1 | 2.5 | 31.5 |
| 5. இலங்கை இறப்பர் ஆராய்ச்சிச் சபை ... | — | — | — | — | — | 8.4 | — | — | 8.4 |
| 6. தேசிய வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத்தாபனம்... | — | — | 21.0 | 26.3 | — | — | 26.3 | — | 21.0 |
| 7. இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம் ... | 3.0 | 27.2 | 21.8 | 19.0 | — | — | 22.0 | 27.2 | 21.8 |
| 8. தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் ... | 42.0 | 42.0 | 42.0 | 29.1 | — | — | 71.1 | 42.0 | 42.0 |
| மொத்தம் ... | 179.2 | 266.7 | 242.8 | 309.9 | 50.0 | 192.1 | 489.1 | 316.7 | 434.9 |

(அ) ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள்.

மூலம்: திறைசேரி

விரிவடைந்தமை காரணமாகச் செவனகல தொழிற்சாலையின் வெளியீடு கணிச மாக உயர்வடைந்தமை இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டின் உயர்ந்த மட்டத்திற்குக் காரணமாகிற்று. உருக்குக் கூட்டுத்தாபனத்தின் முன் னேற்றகரமான செயலாற்றத்திற்கு மூலப்பொருட்களின் போதுமான அளவு நிரம்பல் முக்கிய காரணமாக விளங்கியது.

இவ்வாண்டில் நாட்டில் தொடர்ச்சியான அமைதியின்மை காணப்பட்ட போதிலும் பெருந்தொகையான அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் இலா பத்தையீட்டக்கூடியதாகவிருந்தன. 1988 இல் இலாபங்களைப் பதிவு செய்த தொழில் முயற்சிகள் அரச வடிசாலை (ரூ. 360 இலட்சம்), தேசிய புடவைகள் (ரூ. 300 இலட்சம்), இலங்கை மட்பாண்டம் (ரூ. 150 இலட்சம்), இலங்கை ரயர் (ரூ. 130 இலட்சம்), இலங்கை உப்பு (ரூ. 110 இலட்சம்), இலங்கை ஒக்சிசன் (ரூ. 140 இலட்சம்), இலங்கை வாயு நீர் (ரூ. 420 இலட்சம்), வரையறுக்கப்பட்ட அரச இறப்பர் தயாரிப்புக் கூட்டு நிலையம் (ரூ. 50 இலட்சம்) என்பனவாகும்.

மதிப்பீடுகளின்படி அரசதுறைத் தொழில் முயற்சிகளுக்கான வரவு செலவுத் திட்ட மாற்றல்கள் ரூ. 4,350 இலட்சமாக அமைந்தன. இதில் ரூ. 2,430 இலட்சம் (56 சதவீதம்) மூலதன மாற்றல்களாகவும் மீதி ரூ. 1,920 இலட்சம் (44 சதவீதம்) நடைமுறை மாற்றல்களாகவும் விளங்கின. 1988 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான மொத்த வரவு செலவுத் திட்ட மாற்றல்களில் இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் ரூ. 2,050 இலட்சம் அல்லது 47 சத வீதத்தினைப் பெற்றது. 1988 இல் வரவு செலவுத் திட்ட மாற்றல்களைப் பெற்ற ஏனைய கைத் தொழில் முயற்சிகளாகத் தேசிய தாள், இலங்கை உருக்கு, இலங்கை இறப்பர், ஆராய்ச்சி, இலங்கை வளமாக்கி, தேசிய பால் (வரையறுக்கப்பட்ட மில்கோ எனத் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளது), அரச வளமாக்கித் தயாரிப்பு, தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் என்பன விளங்கின.

**வலுவும் எரிபொருளும்**

இலங்கை மின்சபை நீங்கலாக ஏனையவற்றுக்கான கைத்தொழில் எரி பொருளின் விற்பனை 1988 இல் 2 சதவீதத்தினால் அதிகரித்தது. உலை எண்ணெ யின் விற்பனை 2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் பார டீசலின் விற்பனை இவ்வாண்டில் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1988 இல் கைத்தொழிலில் மின்வலுவின் பாவனை 7 சதவீதத்தினால் அதிகரித்தது. இது சிறு அளவுக் கைத்தொழில்கள் மீதான 11 சதவீதமும், நடுத்தரக் கைத்தொழில்கள் மீதான 6 சதவீதமும், பெரிய அளவிலான கைத் தொழில்கள் மீதான 7 சதவீதமும் கொண்ட அதிகரிப்புக்களை உள்ளடக்கி யிருந்தது.

### அட்டவணை 1.18

### கைத்தொழிலில் வலு, எரிபொருள் என்பனவற்றின் பயன்பாடு 1986—1988

| விடயம் | 1986 | 1987 | 1988(அ) |
|---|---|---|---|
| 1. மின்வலு (கிகாவாட் மணித்தியாலங்கள்) (ஆ) ... ... | | | |
| 1.1 சிறு கைத்தொழில் ... ... | 925.3 | 865.9 | 925.0 |
| 1.2 நடுத்தரக் கைத்தொழில் ... ... | 35.6 | 38.9 | 43.0 |
| 1.3 பெரிய கைத்தொழில் ... ... | 444.8 | 449.5 | 478.4 |
| | 444.9 | 377.5 | 403.6 |
| 2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் ... | | | |
| ('000 மெற்றிக் தொன்கள்) (இ) ... ... | 149.5 | 180.3 | 183.6 |
| 2.1 பார டீசல் ... ... | 19.8 | 18.6 | 18.1 |
| 2.2 உலை எண்ணெய் ... ... | 129.7 | 161.7 | 165.5 |

மூலங்கள்: இலங்கை மின் சபை.
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) தயாரிப்பு, ஏற்றுமதிப் பதனிடல் கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது. சிறுகைத்தொழில் 50 கிலோ வாட்டுக்குக் குறைந்ததும், நடுத்தரக் கைத்தொழில் 50–500 கி. வாட்டையும் பெரும் கைத்தொழில் 500 கி. வாட்டுக்கு மேற்பட்ட இயலளவினையும் கொண்ட கூறுகளாகும்.

(இ) இலங்கை மின்சபைக்கான விற்பனைகள் நீங்கலாக.

## முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (கொ.பெ.பொ.ஆ.) 1988 இல்31 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததன் மூலம் 1988 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தச் செயற்றிட்டங்களின் எண்ணிக்கையை 283 இற்குக் கொண்டு வந்தது. இவற்றில் 164 செயற்றிட்டங்கள் கைத்தொழில்களை நிறுவுவதற்காக கொ.பெ.பொ.ஆ. உடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. மொத்தமாக 69 தொழில் முயற்சிகள் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்குள்ளேயும், 11 தொழில் முயற்சிகள் பியகம முதலீட்டு ஊக்குவிப்புவலயத்திற்குள்ளேயும் வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவேளையில் 21 தொழில் முயற்சிகள் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களுக்கு வெளியே உற்பத்தியிலீடுபட்டிருந்தன. தொழிற்பாட்டிலிருந்த செயற்றிட்டங்களில் 44 தைக்கப்பட்ட ஆடைகளினதும் அது தொடர்பான விடயங்களினதும் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் ஈடுபட்டிருந்தன.

1988 இல் கொ.பெ.பொ.ஆ. இனால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் தோல் கை உறைகள், அறுவைச் சிகிச்சைக் கையுறைகள், துவாய்கள், குளியலறை ஆடைகள், பெண்கள் கோடைக்கால உடைகள், இறப்பர் மரத் தளபாடங்கள், செயற்படு கரியம், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், வெண் களிமண் உருவங்கள், சலவைக் கல்லும் கருங்கல்லும், உருக்கு அச்சுக்களும் மைகளும், நீர் விளையாட்டுக் கலங்கள், பனியில் சறுக்கும் பாதணிகள், தோட்டவேலை, மின்னியல் மற்றும் மின்வலுப் பொருட்கள், காய்கறிகளும் பிஞ்சுக் காய்களும், இலைவகைச் செடிகள், பொறிகளின் தயாரிப்பு, வர்த்தக வசிப்பிட பரம்பல்கள், கணனிப் பாவனை அபிவிருத்தி, கொள்கலன் பணிகளின் ஏற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

*1988 இல் கொ.பெ.பொ.ஆ. இன் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 95,460 இலட்சமாக (சிஎஉ 2,230 இலட்சம்) அமைந்து ரூபா நியதிகளில் 1987 இனைவிட 27 சதவீதம் கூடுதலாக விளங்கின. சிஎஉ நியதிகளில் இவ் அதிகரிப்பு 10 சத வீதமாகும். புடவைகளும் தயாரிக்கப்பட்ட ஆடைகளும் துறை ஏற்றுமதி வருவாய்களில் 73 சதவீதத்திற்கு வகை கூறியது.*

*அட்டவணை 1.19*

**முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்-தொழில் வாய்ப்பும் ஏற்றுமதி வருவாய்களும்**
**1987—1988**

| வகை | 1987 | | 1988 (அ) | |
|---|---|---|---|---|
| | தொழில் நிலை (டிசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.எ.பெ.) ப.இ.ரூ. | தொழில் நிலை (டிசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க. எ. பெ.) ப. இ. ரூ. |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 641 | 147.0 | 796 | 199.3 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 38,342 | 5,989.2 | 39,848 | 6,978.6 |
| 3. மரமும், மர உற்பத்திகளும் (தளபாடங்கள் உட்பட) ... | 56 | 4.0 | 77 | 6.2 |
| 4. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 1,999 | 273.0 | 2,285 | 378.7 |
| 5. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து) | 2,132 | 309.5 | 2,817 | 667.3 |
| 6. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும் போக்குவரத்து கருவிகளும்... | 435 | 177.0 | 1,202 | 413.9 |
| 7. வேறெங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 3,333 | 424.7 | 3,680 | 497.1 |
| 8. பணிகள் (ஆ) ... | 3,805 | 209.8 | 3,921 | 405.2 |
| மொத்தம் ... | 50,743 | 7,534.1 | 54,626 | 9,546.3 |

மூலம்: கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு

(அ) தற்காலிகமானவை
(ஆ) வரையறுக்கப்பட்ட "எயர் லங்கா நீங்கலாக"